2024 பிப்ரவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***55668—திரு. S. சந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்திற்கு பொன்னை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் இரா.கி. பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 38 ஊராட்சிகளில் 287 குடியிருப்புகள் உள்ளன. திருத்தணி மற்றும் இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய 9 ஊராட்சிகளில் உள்ள செருக்கனூர் மற்றும் 114 ஊரகக் குடியிருப்புகளுக்கு, பொன்னை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தேவையான நீர் ஆதாரம் இல்லாததால், கொசஸ்தலை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு, ரூ.44.58 கோடி மதிப்பீட்டில் உயிர் நீர் இயக்கத்தின் (ஜல் ஜீவன் இயக்கம்) கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு இதுவரை 15 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நவம்பர் 2024-ல் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 53,630 நபர்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 2.95 MLD குடிநீர் வழங்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த 4 ஊராட்சிகளிலுள்ள (இரா.கி. பேட்டை, வங்கனூர், ஐ.சி.எஸ். கண்டிகை மற்றும் எஸ்.வி.ஜி. புரம்) 57 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 34 ஊராட்சிகளில் உள்ள 230 குடியிருப்புகளுக்கு ஊரக வளர்ச்சி முகமைமூலம் தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்புத் திட்டத்திலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை 47 என்ற அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், சில இடங்களிலே இருக்கக்கூடிய குடிநீர் இணைப்பினைப் பயன்படுத்தி அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கூடுதலாக சில இடங்களிலே pipeline விஸ்தரிப்பு தேவைப்படுவதால், அதனை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடிநீர் திட்டம் தீட்டப்படும்போது, அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, எந்த இடத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டும் என்பதை முடிவு செய்திருப்பார்கள். நகரங்கள் நாள்தோறும் விரிவடைகின்ற காரணத்தால், தேவைப்படுகின்ற இடங்களிலே

2024 பிப்ரவரி 13]
பின்னாளில் குறிப்பிட்ட அந்த இடத்தில் தொட்டி கட்டப்படும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கும். தரையிலே கட்டப்படுகின்ற sump ஆக இருந்தாலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியாக இருந்தாலும் தேவைப்படுகின்றபோது அவற்றைக் கட்டி மக்கள் அனைவருக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிற வகையிலேதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் அருகாமையிலே இருக்கக்கூடிய ஒருசில கிராமங்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அம்மையார்குப்பம், ஆதிவராகபுரம், கே.ஜி. கண்டிகை உள்ளிட்ட கிராமங்களை இந்தத் திட்டத்திலே சேர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து எழுத்துப்பூர்வமாக எழுதித் தந்தால், அதிகாரிகளிடம் சொல்லி, ஆய்வு செய்து, அதை எப்படி இணைக்கலாம் என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி தாக்குதலுக்குப் பிறகு, மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டுமென்று 2006 ஆம் ஆண்டு சுனாமி கூட்டுக் குடிநீர் திட்டம் கிள்ளியூர் தொகுதி வழியாக 4 தொகுதிகளைக் கடந்து கன்னியாகுமரிக்குச் சென்றடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 3¾ மீட்டர் என்ற அளவில் சாலை இருக்கிறது என்றால், சாலையின் நடுவிலே அந்தக் காலத்தில்

[2024 பிப்ரவரி 13

சிமெண்ட் pipe பதிக்கப்பட்டதால் நிறைய இடங்களில் அவை உடைந்து, விபத்துகள் தொடர்ந்து ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. Road–களும் தற்போது பழுதடைந்துவிட்டன.

முற்பகல் 10–20

நெடுஞ்சாலைத் துறைமூலம் நிதி ஒதுக்கப்பட்டும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட முடியாமல் இருக்கின்றன. எனவே, அங்குள்ள பழைய சிமெண்ட் குழாய்களை அகற்றிவிட்டு, தற்போதுள்ள நவீன technology மூலம் குழாய்களை அமைத்தால்தான் மீண்டும் விபத்துகள் ஏற்படாமல் இருக்கும். எனவே, போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அதைச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒவ்வோராண்டும் ஒவ்வொரு முறையில் குழாய்கள் அமைக்கப்படுகின்றன. முன்பு சிமெண்ட் குழாய் அமைக்கப்பட்டது; பின்னர், வேறு வகையான குழாய்கள் அமைக்கப்பட்டன. அவையெல்லாம் போதுமான அளவிற்கு சரியானதாக இல்லை. புதிய தொழில்நுட்பத்தினாலான குழாய்கள் அமைக்கும் முறை தற்போது வந்திருக்கிறது. தற்போது நிறைவேற்றப்படும் திட்டங்களிலெல்லாம் இரும்புக் குழாய்களில் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சிமெண்ட் பூசப்பட்டு, நீண்ட காலம் பயன்படுத்தப்படுகிற வகையில் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே அமைக்கப்பட்ட வழித்தடங்களில் பல குழாய்கள் பழுதடைந்து, தண்ணீர் சரியாகப் போகவில்லை என்று 60 இடங்களுக்கும் மேலான இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு மறுசீரமைப்பின்மூலம் இந்த ஆண்டில் புதிய குழாய்கள் பதிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து நாளை அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்படும். சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கருத்தில்கொண்டு,

2024 பிப்ரவரி 13]
மிகவும் அவசரம் எனில், முன்னுரிமை அளிக்கப்பட்டு, போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் சுமார் 35-க்கும் மேற்பட்ட இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, நிலத்தடி நீர் எடுக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துகொண்டே செல்கிறது. எனவே, கொள்ளிடம் ஆற்றில் பல இடங்களில் ஆய்வு செய்து, தடுப்பணைகளை அமைத்தால்தான் நிலத்தடி நீர்மட்டம் உயரும். ஆகவே, விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நீர்ச் செறிவு பெறுவதற்கு தடுப்பணைகள் அமைக்கப்படுவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா? அவ்வாறு அமைக்கும்பட்சத்தில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட விளாங்குடி மற்றும் விஷ்ணம்பேட்டை பகுதிகளில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள் அமைக்கப்படவிருப்பதாக அதிகாரிகள் கூறினார்கள். அந்தப் பணிகள் எந்த நிலையில் உள்ளன என்பதை அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடமும் இதுகுறித்து விரிவாகப் பேசியிருக்கிறோம். ஆயிரம் இடங்களுக்கும் மேலாக இத்தகைய தடுப்பணைகள் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தற்போது காவிரியிலும், கொள்ளிடத்திலும் 244 இடங்களில் ஆழ்குழாய்க்*

கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நிலத்தடி நீர் குறையாமல் இருக்க வேண்டுமானால், வருங்காலத்தில் தடுப்பணை கட்டினால் மட்டுமே நிலத்தடி நீரைச் சேமிக்க முடியும். அது அரசின் கவனத்திலும் இருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியாக இருக்கும் சிறுவாணி அணையிலிருந்து மாநகர மக்களுக்கு வழங்கப்படவேண்டிய 73 MLD குடிநீருக்குப் பதிலாக 38 MLD குடிநீர் மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு 25 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதுகுறித்து விசாரித்ததில், கேரள அரசு சிறுவாணி அணையிலிருந்து வழங்க வேண்டிய தண்ணீரின் அளவில் சுமார் 35 MLD குறைவாக வழங்குவதாகத் தெரியவந்துள்ளது. இதுகுறித்து, கேரள மாநில அரசுடன் கலந்துபேசி, சிறுவாணி அணையிலிருந்து நீரை உரிய அளவில் பெறவும், நமது உரிமையை நிலைநாட்டவும் இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோவை நகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வேண்டி, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கோவை மாநகராட்சி, வெள்ளலூரில் 61.62 ஏக்கர் பரப்பளவில் 168 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து புதிதாக கட்டப்பட்டுவந்த பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் 50 சதவிகிதம் நிறைவுற்ற நிலையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் குடிநீர்ப் பிரச்சினை குறித்து கேட்டீர்கள். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: இதுவும் அதையொட்டிய கேள்விதான்.

2024 பிப்ரவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்தடுத்து 2 கேள்விகளைக் கேட்கிறீர்கள். ஒரு துணைக் கேள்விதான் கேட்க வேண்டும். (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *எப்பொழுதாவதுதான் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. இதுவும் அதையொட்டியே எழுகிற கேள்விதான். ஏற்கெனவே, இதுகுறித்த கேள்வியை எழுப்பியபோது, "உடனடியாக முடித்துத் தரப்படும்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோவை மக்களின் நலன் கருதி, மீண்டும் அந்தக் கட்டுமானப் பணிகளைத் துவக்கி, முடித்துத் தர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அங்குள்ள பொதுமக்கள் இதற்காக குழு அமைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசு உடனடியாக அப்பணிகளை முடித்துத் தருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு சிறுவாணி தண்ணீரைக் குறைவாகத் தருகிறது என்பதை நான் ஏற்கெனவே நேற்றைய கூட்டத்தில்கூட சொல்லியிருக்கிறேன். 101.40* MLD *தண்ணீர் தர வேண்டும்; ஆனால், 36* MLD *தான் தருகிறார்கள். மழை இல்லாத காரணத்தினால், "ஆழியாறிலிருந்து விவசாயத்திற்கு நாம் அவர்களுக்குத் தரக்கூடிய நீரைக் குறைவாக தருகிற காரணத்தால், சிறுவாணியிலிருந்து நாங்கள் உங்களுக்குத் தரவில்லை" என்று சொன்னார்கள்.*

கடந்த முறை இதுகுறித்து சொன்னபோதுகூட, உடனடியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலத் தலைவருடன் பேசி, கேரளாவின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நேற்றுகூட பாராளுமன்ற உறுப்பினர் திரு. நடராஜன் அவர்களிடம் "இதுபோல் இருக்கிறதே" என்று கேட்டபோது, "நான் பேசுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, சிறுவாணி தண்ணீரைப்

பெறுவதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இது ஒன்று.

இரண்டாவதாக, பில்லூர்-3-வது திட்டத்தின்கீழ் 178 MLD தண்ணீர் வழங்கும் திட்டம் நேற்று துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில், மின்னழுத்தம் சற்று குறைவாக இருக்கிற காரணத்தால், 2 மோட்டார்கள் மட்டும் போடப்பட்டிருந்தன. இப்போது, 6 மோட்டார்கள் போடப்பட்டு, மின்சாரம் சரி செய்யப்பட்டு, புதிதாக நாளொன்றுக்கு 300 MLD அளவிற்கு கோவை நகருக்குத் தண்ணீர் வழங்குகிற திட்டம் துவக்கப்பட்டுவிட்டது. எனவே, கோவை நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ளலூர் பேருந்து நிலையத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்திலே TWAD Board-க்குச் சொந்தமான இடத்தில் இந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அந்தப் பேருந்து நிலையத்தை உடனடியாகச் சரிசெய்கிறபோது—அங்குள்ள இணைப்புச் சாலைகள், குறிப்பாக திருச்சியிலிருந்து வருகிற சாலையும், அதையொட்டி வருகிற இணைப்புச் சாலையும் அகலப்படுத்தப்பட்டால்தான் பேருந்து நிலையப் பணியில் வெற்றி பெற முடியும். (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: Highways சாலை அங்கு. . .

மாண்புமிகு திரு. கே.என். நேரு: இல்லை. நான் அங்கு சென்று பார்த்தேன். Road குறுகலாக உள்ளது. பேருந்து வரும்போது அது சரியாக இருக்காது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். எனவே, இந்த ஆண்டு அந்தப் பணியை எடுத்து முடிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே, கீழ்பெண்ணாத்தூர் மற்றும் 130 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த்

2024 பிப்ரவரி 13]

திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அதில் pvc pipe-கள் இருப்பதால், வழியிலே இருக்கக்கூடிய நில உரிமையாளர்கள் pipe-ஐ உடைத்து தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கீழ்பெண்ணாத்தூர் பகுதிக்கு தண்ணீர் சென்று சேரமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த pipe-களை எல்லாம், DI pipe-களாக மாற்றினால்தான், அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தினுடைய வெற்றிக்குக் கண்டிப்பாக DI pipe-கள் அமைக்கப்பட வேண்டும். அதேபோல, ஜல் ஜீவன் திட்டத்திலே, என்னுடைய தொகுதியிலுள்ள வேட்டவலம் பேரூராட்சியிலே, குடிநீர் திட்டத்திற்காக ஏரிகளில் கிணறு வெட்டுவதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படாததால், கிணறு வெட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து என்னுடைய தொகுதியின் அனைத்து கிராமங்களுக்கும் தங்குதடையின்றி குடிநீர் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஊருக்குப் போகின்றபோதே இதைப் பற்றிச் சொன்னார்கள்; உடனடியாக, pipe-களை மாற்றி புதிய இரும்பு pipe-கள் போடுவதற்கு, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உரிய முறையில் ஆய்வுசெய்யப்பட்டு, நிதிநிலைக்கேற்ப எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

இரண்டாவதாக, கீழ்பெண்ணாத்தூர் பகுதியில் ஏரியில் புதிய ஆழ்துளைக் கிணறு வெட்டி, அந்தக் கிணறு மூலமாகத் தண்ணீர் தரலாம் என்ற ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். "தலைமை அலுவலகம் அனுமதியளித்தால்தான் அதனைச் செய்யமுடியும்" என்று அப்பகுதியில் உள்ள நீர்வளத் துறைப் பொறியாளர் அவர்கள் சொன்னார். இதுகுறித்து, நீர்வளத் துறை அதிகாரிகளிடம் பேசினோம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் இதற்கான கருத்துருவைக் கொடுத்து, உரிய முறையில் நீர்வளத் துறையின் அனுமதியைப் பெற்று, கிணறு வெட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

[2024 பிப்ரவரி 13

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுகுறித்து சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சரைச் சந்தித்து அதற்கான அனுமதியைப் பெற்றால், விரைவாக அப்பணிகள் முடிக்கப்படும். Pipe-களையும் மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியிலுள்ள கோனூர் ஊராட்சி பெரிய ஊராட்சி. கோனூர் ஊராட்சியில்தான் காவிரி ஆறு ஓடுகிறது. அந்த ஊராட்சி 22,000 வாக்காளர்களைக் கொண்டது. பள்ளியப்பட்டிக்கும், கோனூர் கிராமத்திற்கும் தனி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சரும், நம்முடைய பொறுப்பு அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களும் நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக ஆட்சி தொடங்கப்பட்டு, இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 3 ஆண்டுகளில் 58 புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.7,148 கோடி. நாளொன்றுக்கு 663.36 மில்லியன் லிட்டர் வழங்கப்பட்டு, 103 இலட்சம் மக்கள் இதன்மூலம் பயன்பெற்று வருகிறார்கள். நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிற புதிய திட்டங்களைப் பொறுத்தவரையில் ரூ.15,155.89 கோடிக்கு புதிய திட்டங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களால் பயன்பெறவிருக்கின்ற மக்கள்தொகை 75.45 இலட்சம் ஆகும். நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு நடைபெற்று வரும் மறு சீரமைப்புத் திட்டங்கள்; ஏற்கெனவே பைப் உடைந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்களல்லவா! அதற்கான திட்ட மதிப்பீடு ரூ.1,658 கோடி. மேலும், 50 இலட்சம் மக்கள் பயன்பெறுகிற வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

2024 பிப்ரவரி 13]

முற்பகல் 10–30

மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள் கேட்டுகொண்டதைப்போல, 13 திட்டங்கள் ஆய்வில் உள்ளன. அதன் திட்ட மதிப்பீடு 19,910 கோடி ரூபாயாக இருக்கிறது. ஒரு கோடி மக்கள் பயன்பெறுகிற வகையில் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட 3 ஆண்டு காலத்தில், 4 கோடியே 53 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது மேலும், 2 கோடி மக்கள் பயன்பெறுகிற வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தத் திட்டங்களையும் மறுபரிசீலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

பள்ளிக்குப் புதிய கட்டடம்

***51218—திரு. செ. முருகேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஊராட்சி ஒன்றியம், சத்திரகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) போகலூர் ஊராட்சி ஒன்றியம், போகலூர் ஊராட்சி, சத்திரக்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், 76 மாணவர்களுக்கு 3 பள்ளிக் கட்டடங்களில்